





# புத்தொளியில் மகளிர் புத்தொழில்!

## திராவிட மாடல் அரசு

77

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

வேலை வாய்ப்பு... இன்றைய இந்தியாவின் மிகப்பெரிய சவால்களில் ஒன்று! ஒவ்வோர் ஆண்டும் லட்சக்கணக்கான பட்டதாரிகள் உருவாகின்றனர். அவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கிறதா என்றால், இல்லை என்பதுதான் நிலையான பதில்.

எனினும் நாட்டின் பொருளாதாரத்துக்கு அதிக அளவில் பங்களிப்புச் செய்யும் ‘திராவிட மாடல்’ தமிழ்நாடு, வேலை வாய்ப் பின்மைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அதுதான் தொழில்முனைவு. ஆம்... இளைஞர்களை வேலை வாய்ப்புத் தேடுபவர்களாக இல்லாமல், அவர்களை மற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் தொழில்முனைவோர்களாக மாற்ற, எண்ணற்றத் திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’.

அப்படி ஒரு திட்டம்தான், பெண் தொழில் முனைவோர் மேம்பாட்டுக்கு உதவும் ‘புத்தொழில் இயக்கம்’. இது பெண்களுக்கான பிரத்யேக இயக்கம். இதனை ‘தமிழ்நாடு ஊரகத் தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க நிறுவனம்’ *(Tamil Nadu Rural Incubator and Startup Enabler-TN-RISE)* செயல் படுத்துகிறது.

### வளர்ச்சியைத் தடுக்கும் சவால்கள்!

தொழில்முனைவு என்பது, வேலை இல்லா திண்டாட்டத்துக்கு மட்டுமல்லாமல், பொருளா தார மேம்பாட்டுக்கும் சக்தி வாய்ந்த ஒரு தீர்வாகக் கருதப்படுகிறது. இருப்பினும், ஆண் தொழில்முனைவோர்களைக் காட்டிலும் பெண் தொழில்முனைவோர்கள் சந்திக்கும் சவால்கள் அதிகம்.

தொழில் தொடங்க நிதி, பொருட்களைச் சந்தைப்படுத்துதல், தொழிலைப் பரவலாக்கத் தேவையான தொழில் தொடர்புகள் மற்றும் தொழிலில் புதுமைகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்பம் போன்றவற்றைப் பெறுவதற்கு அவர்கள் நிறைய பிரச்சினைகளைக் கடந்து வர வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி பாலின ரீதியான சவால்களையும் எதிர்கொள் கின்றனர்.

### ஆலோசனையும் ஆதரவும் ஆண்டுதோறும்!

தமிழ்நாடு முழுவதிலும் இருந்து, இந்த மையத்தின் மூலம் உயர்தரச் சேவைகளைப் பெற தகுதியான 126 மகளிர் தொழில்முனை வோர்களும் 80 மகளிர் தொழில் குழு நிறு வனங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும் இவ்வாறு நூற்றுக்கணக்கான மகளிர் தொழில்முனைவோர் மற்றும் மகளிர் தொழில் குழுக்கள், இந்த மையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டுப் பயன்பெறவிருக்கின்றனர்.

இத்தகைய தொழில்முனைவோருக்கு வழிகாட்டவும், தேவையான சேவைகளை வழங்கவும், தமிழ்நாட்டில் மட்டுமின்றி உலக அளவில் பிரசித்தி பெற்ற ஹெச்.பி., ஃப்ளிப்கார்ட் போன்ற பல்வேறு நிறுவனங்களுடன் இந்த மையம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.



### சவால்களை எதிர்கொள்ள உதவி

இந்தச் சவால்கள், மகளிர் உருவாக்கி நடத்தி வரும் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையைத் தடுக்கின்றன. மேலும் சமூகக் கட்டமைப்புகள் மற்றும் மகளிரின் கல்வி நிலை போன்ற பிற தடைகளும் பெண்களின் தொழில்முனைவுப் பயணத்தில் இடையூறாக உள்ளன.

ஆனால், இத்தகைய தடைகளையும் சவால் களையும் தாண்டி, மகளிர் தொழில்முனைவோர் தங்களுடைய தொடர்ச்சியான முயற்சிகள் மூலம் முன்னேறி வருகின்றனர். சமீபகாலமாக, மகளிர் தொழில்முனைவோருக்கு ஆதரவாக ‘திராவிட மாடல் அரசு’ மேற்கொண்டு வரும் தீவிர முயற்சியால், இந்தியாவில் மகளிர் தொழில் நிறுவனங்களில் அதிக சதவிகித (13.51%) தொழில் நிறுவனங்களைக் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு மாறியுள்ளது.

இந்தப் பின்னணியில், 2023-2024-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது, ‘மகளிர் தொழில்முனை வோர் சரியான நேரத்தில் போதுமான கடன் பெறுவதிலும், தங்களின் பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலும் உள்ள சவால்களை எதிர்கொள்ள, பெண்களுக்கான பிரத்யேக ‘புத்தொழில் இயக்கம்’ ஒன்றை தமிழக அரசு உருவாக்கும் எனவும், இந்த இயக்கம் மகளிர் தொழில்முனைவோருக்கு அவர்களின் தொழில் சார்ந்த அனைத்து அம்சங்களிலும் தேவையான மேம்பட்ட உதவிகளை வழங்கும்’ எனவும், தமிழ்நாடு அரசு சட்டமன்றத்தில் அறிவித்தது.

அதைத் தொடர்ந்து, கிராமப்புற மகளிர் தொழில்முனைவோர் தங்கள் வணிக எல்லைகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான உயர்தர மேம்பாட்டுச் சேவைகளை வழங்கு வதற்கு ‘தமிழ்நாடு ஊரகத் தொழில் காப்பு மற்றும் புத்தொழில் உருவாக்க நிறுவனம்’ 2024 ஜூலை 2 அன்று வெற்றிகரமாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

### ஒரே இடத்தில் ஒருங்கிணைந்த சேவை

இந்த நிறுவனம், தொழில்முறை நிபுணத்து வத்துடன் கூடிய உள்கட்டமைப்பு வசதிகள் நிறைந்த ஓர் அமைப்பாக விளங்கும். இது மகளிர் தொழில்முனைவோருக்குத் தேவையான பொருட்கள் உற்பத்தி மேம்பாடு, பேக்கிங், பிராண்டிங், சந்தை இணைப்புகள், நிதி மேலாண்மை, நிறுவன உருவாக்கம் மற்றும் நிறுவன செயல்பாடு ஆகிய பிரிவுகளில் தனிப்பட்ட ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் சேவைகளை வழங்கும்.

தவிர, இந்த மையம் தற்போதுள்ள தொழில் காப்பு மையங்களை (பிசினஸ் இன்குபேஷன் சென்டர்) எளிதில் அணுக இயலாத ஊரக மகளிர் நடத்தும் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான உயர் நிலைச் சேவைகளை வழங்குவதன் மூலம், மாநிலத்தின் தொழில் வணிகச் சூழலில் கிராமப்புற மகளிர் தொழில்முனைவோருக்கும் இதர தொழில்முனை வோருக்கும் மத்தியில் உள்ள இடைவெளியைக் குறைக்கும் வகையில் செயல்படும்.

**கிராமப்புற மகளிர் தொழில்முனைவோருக்கும் இதர தொழில்முனைவோருக்கும் மத்தியில் உள்ள இடைவெளியைக் குறைக்கும் வகையில் செயல்படும்.**

இந்த நிறுவனம், சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள டான்சி நிர்வாக அலுவலகக் கட்டடத்தில் அனைத்து நவீன வசதிகளையும் உள்ளடக்கிய வகையில், கலைநயத்துடன் மகளிர் தொழில்முனை வோருக்குத் தேவையான பிரத்யேக வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, மகளிர் தொழில்முனைவோர்களைத் தொழிலதிபர்களாக்கும் இந்த நிறுவனம், ஒரு கலங்கரை விளக்கம் என்று சொன்னால் அதில் தவறில்லை..!

**...சாதனை தொடரும்**


### ஆங்கிலத்தில் இராமாமிர்தம் அம்மையார்!




திராவிட அரசியலில் மிகப் பெரும் ஆளுமை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். தமிழ்நாட்டில் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முதல் முயற்சி எடுத்தவர். ‘தேவதாசி முறை நீடிக்க வேண்டும்’ எனக் குரல் கொடுத்த பழமை வாதிகள், இராமாமிர்தம் அம்மையாரை மேடையில் வைத்தே அவரது கூந்தலை அறுத்துள்ளனர். இப்படிப் பல இன்னல்களைச் சந்தித்ததுடன், அவர் நடத்திய போராட்டங்கள்தான் இந்திய அளவில் தேவதாசி முறைக்கு முடிவு கட்டியது. இராமாமிர்தம் அம்மையாரின் அத்தனை முயற்சிக்கும் உடன் நின்றவர், தந்தை பெரியார். அவரது போராட்ட வாழ்வையும் தியாகத்தையும் போற்றும் வகையில்தான், கல்வி கற்ற பெண்களுக்குத் திருமண நிதி உதவி என தமிழ்நாட்டின் ஏழை, எளிய பெண் குழந்தைகளுக்குக் கல்வியைக் கொண்டு சேர்த்தார் முத்தமிழறிஞர் கலைஞர். இப்படியான வரலாற்றினை அறிந்து கொள்ளச் செய்தது எழுத்தாளர் பா.ஜீவசுந்தரி எழுதிய ‘மூவலூர் இராமாமிர்தம் வாழ்வும் பணியும்’ என்கிற நூல்.

தற்போது இந்த நூல், திராவிட மாடல் அரசின் ‘திசை தோறும் திராவிடம்’ திட்டத்தின்கீழ், ஆங்கில வடிவம் கண்டுள்ளது. பேரா.பாரதி ஹரிசங்கரின் ஆங்கில மொழியாக்கத்தில், புகழ்பெற்ற பெண்ணியப் பதிப்பகமான ZUBAAN மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகக் கூட்டு வெளியீடாக The Life and Work Of Moovalur Ramamirtham Ammaiyar எனும் தலைப்பில் வெளியாகி உள்ளது. ரூ.495 விலையுள்ள இந்த நூல், சென்னை தமிழ்நாடு பாடநூல் நிறுவன அலுவலக தரைத்தளத்தில் அமைந்துள்ள பேராசிரியர் நூற்றாண்டு நினைவுப் புத்தக விற்பனை நிலையத்தில் கிடைக்கிறது.

### ஃப்ளாஷ்பேக்



### “எல்லோரையும் பார்த்து விடுகிறேன்!”



எஸ்.சௌந்தரராஜன்

1989-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்துக்காக கோவை மாவட்டத்துக்கு வருகை தந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அதிகாலை 5:30 மணிக்கு கோவை வந்திறங்கிய தலைவர் கலைஞரை வரவேற்கப் பெருங்கூட்டம் திரண்டிருந்தது. கிட்டத்தட்ட 2 மணி நேரம் நின்று, நாங்கள் அளித்த வரவேற்பை ஏற்றார். அப்போது, மாவட்டச் செயலாளராக இருந்த பொங்கலூர் ந.பழனிச்சாமி அவர்களிடம் “இன்னும் இருக்காங்களா? எல்லாரையும் இருந்து பார்த்துவிட்டுப் போகிறேன்” என்று சொன்னார் தலைவர் கலைஞர். அப்போது வேடப்பட்டி கிளைச் செயலாளராக இருந்த நான் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**–எஸ்.சௌந்தரராஜன், மாவட்ட முன்னாள் பிரதிநிதி, வேடபட்டி பேரூர் கழகம், கோவை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### மாநாட்டில் படப்பிடிப்பு!

1958-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 மற்றும் 9 தேதிகளில் மதுரை மாவட்ட தி.மு.கழக 3-வது மாநாடு பழனியில் நடைபெற்றது. பழனியில், அதுபோன்ற மக்கள் கூட்டத்தினைக் காண்பது அரிது என்கிற வகையில், கழகத்தினர் குடும்பம் குடும்பமாகக் கலந்து கொண்டனர். இரண்டு நாள் மாநாட்டு நிகழ்ச்சிகளும் தமிழ்த் திரைப்பட இயக்குநர் திருமுகம் உதவியுடன், படப்பிடிப்பு செய்யப்பட்டன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

539

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131